**PROCEEDING OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY SEIAA-TN FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT M/S. M. VENKADESAN ROUGH STONE AND GRAVEL QUARRY SURVEY NUMBERS : 81/2 & 82/9A OVER AN EXTENT OF 2.30.50 HECTARES, T.NALLALAM VILLAGE, MARAKKANAM TALUK, VILLUPURAM DISTRICT.**

**Name of the Project:** Proposed to mining project of Rough stone and Gravel quarry with in an Extent of 2.30.50 Hectares by the unit M/s. M. Venkadesan Rough Stone and Gravel Quarry Survey Numbers : 81/2 & 82/9A, T.Nallalam Village, Marakkanam Taluk, Villupuram District

**Venue:** M/s. V.R.M Mahal A/c, Nadukuppam Road, Siruvadi – Murukeri, Marakkanam Taluk, Villupuram District - 604301

**Date & Time:** 15.07.2025, 10.30 AM -11.30AM ,Tuesday

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. K. Raju | Sub Collector (A/c)<br>Tindivanam, |
| 2. | Dr.S.Rajendiran, | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 3. | Er.S.Elayaraja | Assistant Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 4. | Er.P.Ramkumar | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 5. | Er. M.Sangavi, | Assistant Engineer, |

| | | |
|---|---|---|
| | | Tamilnadu Pollution Control Board,<br>Villupuram |
| 6. | Thiru. R.Ramesh | Revenue Inspector,<br>Bramadesam |
| 7. | Thiru.M.Venkadesan | The Proprietor,<br>M/s. M. Venkadesan Rough Stone and Gravel Quarry |
| 8. | Dr.M.Suresh | EIA Consultant Global mining solution, Salem |
| 9. | Thiru. G.Balasubramani | Global mining solution, Salem |
| 10. | Thiru.V. Venkatesh | Geologist,<br>Global mining solution, Salem |
| 11 | Public and Environmentalists | 69 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Villupuram District has welcomed the Sub Collector (a/c), Tindivanam, Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of M/s. M. Venkadesan Rough Stone and Gravel Quarry Survey Numbers : 81/2 & 82/9A Over an Extent of 2.30.50 Hectares, T.Nallalam Village, Marakkanam Taluk, Villupuram District **has proposed to Mining project of Rough stone and Gravel quarry**. This activity attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Villupuram, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006 on 01.03.2025. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Villupuram. A public notice for the public hearing, scheduled on 15.07.2025, was published in *The Times of India* and *Dailythanthi* on 11.06.2025 with the approval of the District Collector, Villupuram. This public hearing is for the proposed industry of

M/s. M. Venkadesan Rough Stone and Gravel Quarry, and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted by the EIA consultant will be explained through a PowerPoint presentation by the project proponent/EIA consultant. Furthermore, the DEE stated that after the presentation, the public can express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The Sub Collector (a/c), Tindivanam requested the project proponent to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

The project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent EIA Co-ordinator will explain about the project.

The representative of project proponent explained the summary of the project and informed that on behalf of the project proponent Mr. M. Venkadesan, Proprietor of the M/s. M. Venkadesan Rough Stone and Gravel Quarry Explained about the project and he welcomed the Sub Collector (a/c), Tindivanam, District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials and explained the details of the project with help of power point presentation.

The Sub Collector (a/c), Tindivanam has invited members of the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

1. **Thiru. Subramani,T.Nallalam Village:**

- He mentioned that he belongs to T. Nallalam village and stated that permission has already been granted for two quarries in the area. As a result, the stream no longer carries water, and for this reason, he is opposing the proposed project.
- The Sub-Collector, Tindivanam (A/C), asked him to elaborate on his statement. He then again stated that if the quarry is granted permission to operate at this site, it will negatively impact agriculture and obstruct the flow of water through the canal to the lake. He further stated that already existing quarries have caused similar issues. Although objections were raised against those quarries as well, they were still granted permission to operate
- He further pointed out that the proposed quarry is located very close to the village lake, a fact which was not disclosed in the proposal.

2. **Thiru. G. Vinothkumar, T.Nallalam Village:**

- He stated that there are 4 acres of wetland classified as poramboke (common land) near the proposed project site in Survey No. 81/2, and a Panchayat Union mango orchard is located approximately 100 meters from the site. If this project is implemented, it could negatively impact these areas. Therefore, he strongly opposed setting up the project at this location
- He further stated, In our area, water is supplied only once every two days. We are unable to carry out agriculture properly. The reason we cannot continue farming is that the depth of the quarries has increased beyond that of the wells. Currently, even wells that are 800 feet deep are drying up. If permission is granted for this project, the depth may exceed 1000 feet. The quarry owners prioritize their income over the problems faced by the local residents.
- He also mentioned that several wells in the village have collapsed and been closed due to the blasting activities carried out in the quarries. The local environment has been severely affected. During the Aadi season,

the wind blows directly toward our village. Villages such as Keezhchiviri, Brahmadesam, Vanniper, and Ariyanthangal, as cited by the proponents, are not directly connected to the proposed project site.

- Regarding the public hearing, he said that no proper announcements were made. Contrary to their claims, there were no notifications made via auto-rickshaws. Our village secretary only informed us the night before the hearing. Hence, it cannot be said that the public was duly informed. Moreover, it is inaccurate to state that everyone who attended the hearing was a farmer from T. Nallalam village
- Therefore, he requested that environmental authorities conduct a fresh site inspection. He also mentioned that there are several palmyra trees around the proposed site, which are a protected and significant species that should be preserved.
- He expressed concern that for the profit of one individual, about 250 acres of dry and wet agricultural land in the surrounding area would be affected. While the government is encouraging natural farming, how can we practice sustainable agriculture in an environmentally degraded area.
- He concluded his statement by noting that there is also a large pond located near the proposed site. He emphasized that all these facts were deliberately omitted by the project proponents, and it appears they are trying to conceal critical information. Hence, he requested that a re-inspection be carried out and a thorough review of the project be undertaken.

**3.Thiru. Ranganathan, Kilsiviri Village:**

- He began his speech by greeting everyone and stated that his agricultural land is located approximately 300 meters away from the proposed project site. He further mentioned that in Survey No. 80/4, there are 8.5 acres of barren land (poramboke), which includes 500 palmyra trees. He expressed concern that if permission is granted for the

quarry, it would adversely impact both the palmyra trees and agricultural activities.

- He further pointed out that in Survey No. 61/2, there are water bodies. He added that in a previously leased quarry, the lessee Mr. Vadivel had encroached upon a natural stream, blocking the flow of water. He feared that if permission is granted again, the same kind of encroachment could occur, and therefore, requested that permission not be granted.
- He also stated that his family owns 66 cents of land in Survey No. 58/5, under Patta No. 608. He questioned the fairness of granting lease permissions without giving any prior notice to the owners of the nearby agricultural lands.
- He asked whether any of those present at the hearing were actual landowners of the nearby agricultural lands. If so, he requested that they produce documentary evidence (patta documents) proving their ownership.
- He questioned the fairness of organizing such meetings by bringing in people through payment and claiming a majority opinion. He asked how it would be justified to issue quarry permits based on the attendance of a paid crowd.
- In response the Sub Collector (A/C) of Tindivanam, reportedly said that they were not aware of the site inspection details carried out by the Revenue, Geology, and Mining Departments. When questioned on this, they agreed that they had no such information.
- He further stated that he had previously submitted a complaint petition against a quarry owned by Mr. Vadivel, but no action had been taken on that matter. He added that though a team was recommended for inspection and measurement, no further steps had been implemented. He requested that prompt action be taken regarding that complaint.

**4.Thiru. Sudhakar, Kilsiviri Village:**

- He stated that some of the previous speakers mentioned that quarries cause negative impacts. However, many families are depending on them for their livelihood.
- He added that people from our village currently travel to other places for employment. With the establishment of this quarry, local people will get job opportunities within the village itself, and agriculture can also be carried out alongside.
- He expressed his support for the project, stating that the quarry is suitably located.

**5.Thiru. Arumugam, T.Nallalam Village:**

- He stated that the number of families whose livelihood depends on the quarry is very minimal. He further mentioned that no details of any inspection conducted by the Revenue Department were made available.
- He added that he had submitted multiple complaints regarding the operations of the quarry run by Nachiyappan, also known as Madhesh, but no action had been taken so far. He alleged that fatalities caused by quarry accidents are being covered up.
- He stated that if the officials had carried out proper inspections, a resolution would have already been found. In the past, people used to drink water directly from wells; now, they are forced to fetch and carry drinking water from elsewhere.
- While explaining the proposed project, he pointed out that the nearby Nallalam Lake was not mentioned. He said that there used to be 32 streams feeding the Nallalam Lake, but now not even a single lake remains.
- He urged that a special team should be formed by the authorities to conduct an immediate inspection and take swift action regarding the issue.

**The following 38 members of the public have expressed their opinion in writing are as:**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1. | Mr.S.Subramaniyan,S/o.Sakarai, Nallalam Village, Marakkanam. | He stated that, he had received information regarding the inclusion of Survey Nos. 81/2 and 82/9A in the proposed quarry auction. Furthermore, they mentioned that Survey Nos. 82/7, 83/2, and 80/4 fall under a canal through which water flows into the lake. If quarry operations are initiated in these areas, agricultural activities will be adversely affected. Hence, they strongly oppose this proposal |
| 2. | Mr. Abdur kadhar,S/o.Mohamad galil, T.Nallalam Village | He mentioned that he had been working outside the village in a different location, staying away from his family to support them. Earlier, he was employed in a quarry near his home, which helped manage household expenses and his children's education. But now, since the quarry has stopped operating, he had to move elsewhere for work. He said the earnings from the new place are not enough, as most of the money goes toward food and accommodation. Hence, he requested that the quarry be allowed to function continuously to support families like his and improve their financial situation. |
| 3. | Mr. Vinoth Kumar, T.Nallalam Village | He stated that he has an objection to the proposed quarry located in Survey Nos. 81/2 and 82/9A of T. Nallalam Village. |

| | | |
|---|---|---|
| | | He further mentioned that the groundwater level in the area has significantly declined, resulting in the drying up of agricultural wells, thereby adversely affecting the local livelihood. Additionally, it was noted that Survey No. 80/4 comprises reserved *tharisu poramboke* land, and Survey Nos. 83/1 and 83/2 contain a protected fruit garden, both situated in T. Nallalam Village. In view of the above, he requested that the proposed quarry project be objected to. |
| **4.** | Mr. Reyas S/o. Riyarmathulla, T. Nallalam Village | They expressed their support for the project, mentioning that it would create job opportunities within the local area for people like them who currently work outside the village, thus helping to improve their standard of living. |
| **5.** | Thiru.Gupsaar S/o.Kaja niyamadhullah, T. Nallalam Village | |
| **6.** | Tmt.Padma , T.Nallalam | She stated that she had been employed outside her native village in recent times. However, as the proposed quarry is situated close to her residence, she believes it would offer her potential financial benefits. |
| **7.** | Thiru. Mohamad hasim S/o. Abdhul Sathoor, T.Nallalam Village | They expressed their support for the project, mentioning that it would create job opportunities within the local area for people like them who currently work outside the village, thus helping to improve their standard of living. |
| **8.** | Thiru. P. Manikandan, S/o.Uthiramorthy, Permukkal post, Marakkanam Taluk | |
| **9.** | Thiru.R.venkatesan | |

| | | |
|---|---|---|
| | S/o.Ramasamy, pazhamukkal Village | |
| **10.** | Thiru.Uthiramoorthy, S/o.Ponnusamy, Pazhamukkal Village | |
| **11.** | Thiru. M. Mohamad musathik S/o.Mohamad musdhappa, T. Nallalam Village | |
| **12.** | Thiru.M.Mohamad thasthagir , S/o. Mohamad yusaf, T.Nallalam Village | |
| **13.** | Thiru. Venkatesan S/o. Govindharaj, keezhsiviri, Pazhamukkal Village | |
| **14.** | Tmt. Geetha Rajendiran, Perumukkal Village | |
| **15.** | Thiru. Rajendiran Subrayan, Perumukkal village | |
| **16.** | Thiru.P.Murugan, S/o. Periyasamy, keezhsiviri village, perumukkal | |
| **17.** | Thiru. Mohamad Jaffer, S/o.Mohamad kalil, T. Nallalam, Perumukkal | |
| **18.** | Tmt. S. Aabitha, D/o.Sardhaar basha, T.Nallalam | |
| **19.** | Thiru. G.Arumugam s/o. Govindhasamy, T.Nallalam village | They objected to the project, expressing concern that their agricultural lands, which are situated close to the proposed site, would be negatively impacted. |
| **20.** | Thiru. P.Sanjeevi S/o.Ponnusamy, Keezhsiviri Village, Marakkanam Taluk | |
| **21.** | Thiru.S. Ranganadhan, | |

| | | |
|---|---|---|
| | S/o.Subrayan, Keezhsiviri Village | |
| **22.** | Thiru. S. Jayasankar ,<br>S/o.Subrayan, Keezhsiviri Village | |
| **23.** | Thiru. S. Gnanamoorthy,<br>S/o.Subrayan, Keezhsiviri Village | |
| **24.** | Thiru.S. Venkata Subbaiah, President, Poojitha Swachanda seva society, Kadapa, Andra pradesh | He expressed his support for the proposed project and requested that a large number of saplings be planted around the project site. |
| **25.** | Thiru.B.Munikrishnaiah,President, Society for Nature and Biodiversity Conservation Society, Tirupati | He welcomed the proposed project, stating it would benefit local villagers through infrastructure and road development. He recommended dust control measures, use of protective gear, regular health camps, and plantation activities. He also suggested allocating 5% of the company's net profit to CSR. Hence, he requested that Environmental Clearance be granted by MoEF&CC. |
| **26.** | Thiru. B.Subba Ramaiah, Secretary Cum Director, Rural Upliftment Net Work Society, Tirupati, Andra pradesh. | He supported the proposed quarry project and requested Environmental Clearance, assuring that the management will develop a green belt and allocate ESR funds over five years for community welfare. Measures include RO plants, health camps, rainwater harvesting, school and road improvements, dust control through sprinklers, and quarterly monitoring of air, noise, and water quality. |

| | | |
|---|---|---|
| 27. | Thiru. SK.Karimulla , President, Save Green Save Environmental India, NTR Krishna District. | He welcomed the proposed quarry and recommended steps to prevent pollution, provide local employment, and use CSR funds through village committees. He also suggested health camps, tree plantations, and skill training for youth. Highlighting unemployment as a major issue, he requested MoEF&CC to grant Environmental Clearance for the project |
| 28. | Thiru.T.Anil Reddy,President, Green Innovation Natural & Environment society, Karimnagar, Telangana | He welcomed the upcoming project and recommended measures such as improving village roads, providing dust masks and safety gear, conducting medical camps, and developing plantations. He also suggested allocating 5% of net profit towards CSR activities. Hence, he requested that Environmental Clearance be granted by MoEF&CC. |
| 29. | Thiru. S.Ankaiah, President,Sathyavedu Constituency "SEZ" Farmers & A.G.Labourers Protection & Development Association. | He expressed strong support for the proposed Quarry . He stated that skill development programs should be conducted for unemployed youth, and local employment must be ensured. CSR funds should be utilized through village committees for development, and health camps should be organized in surrounding villages. He also suggested planting fruit-bearing and medicinal trees to improve greenery. Highlighting |

| | | |
|---|---|---|
| | | unemployment as a major issue and requested that Environmental Clearance be granted, as the project would enhance the socio-economic conditions of local people. |
| **30.** | Thiru.P.Hajarathaiah, society for development action, jirravaripalem, Nellore district. | He requested the issuance of Environmental Clearance for the proposed project and recommended tree plantation in the project area. He advised conducting medical camps every six months, providing RO drinking water in needy areas, and developing a Green Belt in nearby villages. He emphasized the need for skill training to tackle unemployment and suggested using 10–15% of CSR funds for community development. He also proposed forming a coordination committee with villagers and project management to address local issues, and urged MoEF&CC to grant the required clearance. |
| **31.** | Thiru.M.Sudhakar, Secretary, Integrated Women Development Welfare Society, Nellore | He welcoming this proposed Quarry . He stated that skill development programs should be conducted for unemployed youth, and local employment must be ensured. CSR funds should be utilized through village committees for development, and health camps should be organized in surrounding villages. He also suggested |

<table>
<tr><td></td><td></td><td>planting fruit-bearing and medicinal trees to improve greenery. Highlighting unemployment as a major issue and requested that Environmental Clearance be granted, as the project would enhance the socio-economic conditions of local people.</td></tr>
<tr><td>32.</td><td>Thiru.Muthu Raja, District Co-ordinator, Bharathiya Naagarika Seva Sangam, Kamuthi Village, Ramnadh District.</td><td rowspan="2">They stated that as an environmental enthusiast, he welcomed the proposed quarry and recommended that it create both direct and indirect employment opportunities for local youth. He suggested that 10% of the company's revenue be allocated for village development, including improvements to roads, schools, and water facilities. He also recommended planting native tree species and involving local committees to ensure environmental and community benefits. Believing the project would uplift rural livelihoods, he requested that Environmental Clearance be granted without delay.</td></tr>
<tr><td>33.</td><td>Thiru. D.Malardavan, District Co-ordinator, Bharathiya Naagarika Seva Sangam, Royapuram, Chennai.</td></tr>
<tr><td>34.</td><td>Thiru. A.P.Rajendiran,Founder and President,Bharathiya Naagarika Seva Sangam, Tirupati</td><td>They stated that as environmental enthusiasts, they welcomed the proposed quarry and recommended that</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **35.** | Thiru. V.Manikandan, Bharathiya Naagarika Seva Sangam, Keezhperumpakkam, Villupuram | it create both direct and indirect employment opportunities for local youth. They suggested that 10% of the company's revenue be allocated for village development, including improvements to roads, schools, and water facilities. They also recommended planting trees and involving local committees to ensure environmental and community benefits. Believing the project would uplift rural livelihoods, they requested that Environmental Clearance be granted without delay. |
| **36.** | Thiru.V.Suresh, Bharathiya Naagarika Seva Sangam, Keezhperumpakkam, Villupuram | |
| **37.** | Thiru.P.Muthukumaran,District co-ordinator, Bharathiya Naagarika Seva Sangam, Cuddalore | |
| **38.** | Thiru.M.Sivanathan,District co-ordinator, Villupuram | |

**Thiru. Manikandan, Pazhamukkal Village:**

He stated that he is a Hitachi operator and is currently unemployed. He expressed his support for the proposed project, stating that it would provide him with employment opportunities.

**Thereafter no views/comments were raised.**

**The District Environmental Engineer, TNPCB, Villupuram.**

Finally the DEE, TNPCB, Villupuram summarized views, suggestion and responses of the public about the Project and also informed that the said views, suggestion and responses of the public are recorded through video-graphy and the same will be sent to the State Environmental Impact Assessment Authority, Tamilnadu along with the written representation received from the Public.

Furthermore, the DEE, TNPCB, Villupuram has informed that as per the public notice in the newspaper for this project the proceeding of the public hearing will be made displayed at the District Collectorate Office - Villupuram, Marakkanam Panchayat Union office, MarakkanamTaluk office, T.Nallalam Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Vilupuram, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Commands, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –TamilNadu / MoEF&CC) and the applicant concerned.

17/07/25

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Villupuram.**

17/07/25

**Sub collector (a/c)**
**Villupuram.**

Recd 17/07

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 11.06.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 14 & 69 Persons).
3. Audio & Video stored in the Pendrive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting – 38 Nos.

**விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், T. நல்லாளம் கிராமம், சர்வே. எண்கள் 81/2 மற்றும் 82/9A ல் 2.30.50 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் M. வெங்கடேசன் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி உத்தேசிக்கப்படுவது குறித்து மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விபரங்கள்**

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்:** | விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், சொக்கந்தாங்கல் கிராமம், சர்வே. எண்கள் 81/2 மற்றும் 82/9A ல் 2.30.50 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள் M. வெங்கடேசன் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவப்படவுள்ளது. |
| **இடம்:** | தி/ள் வி.ஆர்.எம் மஹால் A/C, நடுக்குப்பம் சாலை, சிறுவாடி - முருக்கேரி, மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் – 604301. |
| **நாள் மற்றும் நேரம் :** | 15/07/2025 - காலை 10.30 - 11.30 மணி |

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு. கே. ராஜு | சார் ஆட்சியர் (கூ.பொ), திண்டிவனம். |
| 2. | Dr.செ.இராசேந்திரன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம். |
| 3. | திரு. S. இளையராஜா, | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம். |
| 4. | திரு. P. ராம்குமார், | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம். |

| | | |
|---|---|---|
| 5. | திரு. M. சங்கவி, | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விழுப்புரம். |
| 6. | திரு. R. ரமேஷ், | வருவாய் ஆய்வாளர்,<br>பிரம்மதேசம். |
| 7. | டாக்டர். எம். சுரேஷ், | EIA Consultant,<br>தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர் , சேலம் - 636455. |
| 8. | திரு. G. பாலசுப்ரமணி | தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர் , சேலம் - 636455. |
| 9. | திரு. வே. வெங்கடேஷ் | புவியியலாளர்,<br>தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ்,<br>ஓமலூர் , சேலம் - 636455. |
| 10. | திரு. M. வெங்கடேசன் | உரிமையாளர்,<br>தி/ள் M. வெங்கடேசன் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி, T. நல்லாளம் கிராமம். |
| 11. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (69 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் (கூ.பொ), திண்டிவனம் ~~(கூ.பொ)~~ அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், T. நல்லாளம் கிராமம்., தி/ள் M. வெங்கடேசன் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி, சர்வே. எண்கள் 81/2 மற்றும் 82/9A ல் 2.30.50 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 01.03.2025 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள் M. வெங்கடேசன் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், சிறுவாடி – முருக்கேரி, நடுக்குப்பம் சாலை, தி/ள் வி. ஆர். எம் A/c மஹாலில் 15.07.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறும் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" மற்றும் "தினத்தந்தி" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 11.06.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுல்ல மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள் M. வெங்கடேசன் சாதாரண கல் மற்றும் சரளை குவாரி நிறுவனத்தின் EIA Consultant, தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக

பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர் (கூ.பொ), திண்டிவனம், அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

டாக்டர். எம். சுரேஷ் (EIA Consultant), தி/ள் குளோபல் மைனிங் சொலுஷன்ஸ், சேலம் அவர்கள் உதவி ஆணையர் (கலால்) மற்றும் சார் ஆட்சியர், திண்டிவனம் (கூ.பொ) அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் சார் ஆட்சியர் (கூ.பொ), திண்டிவனம்அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**<u>1, திரு. சுப்ரமணி, T. நல்லாளம் கிராமம்</u>**

- இவர் கூறுகையில், தான் T. நல்லாளம் கிராமத்தை சேர்ந்தவன் என்றும், ஏற்கனவே இரண்டு குவாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாகவும், அதனால் ஓடை தண்ணீர் வரவில்லை எனவும் தான் இத்திட்டத்திற்கு மறுப்பு தெரிவிப்பதாக கூறினார்.

- எங்கள் ஊருக்கு இரண்டு நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் வருகிறது குறித்து புகார் அளித்தும் எவ்வித பதிலும் பெறப்பட்டவில்லை. குவாரிக்கு அருகே ஏரி ஒன்று உள்ளது.
- அப்போது, சார் ஆட்சியர் தாங்கள் கூற வரும் கருத்தினை விளக்குமாறு கேட்டுக் கொண்டார். அதனால் மீண்டும் அவர் எங்கள் ஊரில் ஏற்கனவே இரண்டு குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டாம் என நான் மனு அளித்தேன் ஆனால் அரசு தரப்பில் அனுமதி வழங்கப்பட்டது என்றும் எங்கள் ஊருக்கு இத்திட்டம் வந்தால் விவசாயம் பாதிப்படையும் என்பதனால் தான் இத்திட்டத்திற்கு மறுப்பு தெரிவிப்பதாக மீண்டும் கூறினார்.

**2. திரு. G. வினோத் குமார், T. நல்லாளம் கிராமம்,**

இவர் கூறுகையில், தற்போது திட்டமிடப்பட்டுள்ள சர்வே எண் 81/2 க்கு அருகாமையில் 4 ஏக்கர் நஞ்சை பொறம்போக்கு நிலமும், சுமார் 100 மீட்டர் தூரத்தில் ஊராட்சி ஒன்றிய பழ மரத்தோட்டம் உள்ளதாகவும், இத்திட்டம் அமைந்தால் அவைகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதனால் இத்திட்டம் அங்கு அமைய கூடாது என்று தெரிவித்தார்

- எங்கள் பகுதிக்கு இரண்டு முறைக்கு ஒரு தடவை தான் நீர் கிடைக்கிறது. எங்களால் சரியாக விவசாயம் மேற்கொள்ள இயலவில்லை என்றும், விவசாயம் ஏன் மேற்கொள்ள இயல வில்லை என்றால், கிணறுகளின் ஆழத்தை விட குவாரிகளின் ஆழம் அதிகரித்து விட்டது. தற்போது 800 அடி உள்ள ஆழம் அனுமதி அளிக்கப்பட்டால் 1000 அடியை தாண்டக் கூடும். இதன் உரிமையாளர்களுக்கு பொதுமக்களின் பிரச்சனைகளை விட அவர்களின் வருவாய் மட்டுமே முக்கியமாக கருதப்படும்.

- எங்கள் கிராமத்தில் உள்ள கிணறுகள் குவாரிகளில் வெடி வைப்பதனால் சரிவு ஏற்பட்டு மூடப்பட்டுள்ளன. மேலும், சுற்றுச்சூழல் ரீதியாகவும் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம் என்றும், ஆடி மாத காற்றும் கூட எங்கள் கிராமத்தை மட்டுமே நோக்கி வருகிறது, அவர்கள் குறிப்பிட்டது போல் கீழ்சிவிறி, பிரம்மதேசம், வன்னிப்பேர், அரியந்தாங்கல் ஆகிய கிராமங்கள் இத்திட்டத்திற்கு தொடர்பு இல்லாத கிராமங்கள் ஆகும். ஆகையால் அதிகாரிகள் நேரில் வந்து பரிசீலனை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.
- அடுத்து கருத்துக் கேட்பு கூட்டம் குறித்து பொதுமக்களுக்கு அறிவிப்பு ஏதும் அவர்கள் கூறுவது போல் ஆட்டோக்களில் தெரிவிக்கப்படவில்லை என்று கூறினார். எங்கள் கிராம செயலாளர் அவர்கள் நேற்கு இரவு எங்களுக்கு நாளை கருத்து கேட்பு நடைபெற உள்ளது குறித்து கூறினார். ஆகையால் பொதுமக்களுக்கு கருத்துக் கேட்பு கூட்டம் குறித்து தெரிவிக்கப்படவில்லை. மேலும், இங்கு வருகைய புரிந்துள்ள அனைவரும் T. நல்லாளம் கிராமத்தை சேர்ந்தவர் என்றும், விவசாயிகள் என்றும் கூறிவிட முடியாது.
- ஆகையால், சுற்றுச்சூழல் அதிகாரிகள் இந்த இடத்தை மீண்டும் ஆய்வு மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். இந்த இடத்தை சுற்றிலும் பனைமரம் அமைந்து உள்ளதாகவும், அது நாம் பாதுகாக்கப்பட வேண்டிய மரம் என்றும் கூறினார்.
- ஒருவர் லாபத்திற்காக அருகாமையில் உள்ள 250 ஏக்கர் புஞ்சை நிலமும், நஞ்சை நிலமும் பாதிப்படையும். அரசு தரப்பில் இயற்கை விவசாயம் மேற்கொள்ளுங்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இதுபோல் சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ள நிலையில் எங்களால் சிறந்த முறையில் எவ்வாறு விவசாயம் மேற்கொள்ள இயலும்.

➢ மேலும், இத்திட்டத்திற்கு அருகாமையில் ஒரு பெரிய குளம் உள்ளது என்றும், நான் மேற்குறிப்பிட்ட அனைத்தையும் இவர்கள் கூறாமல் விட்டது மறைத்து செய்வது போல் உள்ளது என்பதனால் மறுஆய்வு மேற்கொண்டு இத்திட்டம் குறித்து பரிசீலனை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டு தனது உரையை நிறைவு செய்தார்.

**3. திரு. ரங்கநாதன், கீழ்சிவிறி கிராமம்,**

- இவர் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துக் கொண்டு, தனது விவசாய நிலம் இத்திட்டம் அமையவுள்ள இடத்திற்கு சுமார் 300 மீட்டர் தொலைவில் உள்ளது. மேலும் சர்வே எண் 80/4 தரிசு நிலம் 8.5 ஏக்கர் உள்ளது என்றும், அதில் 500 பனைமரங்கள் உள்ளன- உரிமம் வழங்கப்பட்டால், பனைமரம் மற்றும் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடும்.
- சர்வே எண் 61/2 ல் நீர் நிலைகள் உள்ளது. ஏற்கனவே குத்தகை உரிமம் பெறப்பட்ட திரு. வடிவேல் அவர்கள் ஓடையை ஆக்கிரமிப்பு செய்தால் ஓடை நீர் தடைபட்டுள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட உரிமையாளர் இதனை செய்ததால் இவரும் மேற்கொள்ளக்கூடும் என்பதனால் வழங்க வேண்டாம் என்று தெரிவித்தார்.
- மேலும், எங்கள் நிலம் பட்டா எண்608 சர்வே எண் 58/5 ல் எங்களின் 66 செண்ட் நிலம் உள்ளது. அருகில் உள்ள விவசாய நில உரிமையாளர்களுக்கு எவ்வித முன் அறிவிப்பு வழங்காமல் குத்தகை உரிமம் வழங்குவது எவ்விதத்தில் நியாயம் என்று கேள்வி எழுப்பினார்.

- மேலும், இங்கு வருகை புரிந்துள்ள எவரேனும் அருகில் உள்ள விவசாய நிலங்களில் உரிமையாளரா என்று கேள்வி எழுப்பி அவ்வாறு இருந்தால் அவர்களின் பட்டா நிலத்தை காண்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.
- இப்படி தொகை கொடுத்து ஒரு கூட்டத்தை அழைப்பு வந்து பெரும்பான்மை கோருவது எவ்விதத்தில் நியாயம் என்று கேட்டுக் கொண்டார். காசு கொடுத்து அழைத்து வரப்பட்ட கூட்டத்தை அடிப்படையாக கொண்டு உரிமம் வழங்குவது எவ்விதத்தில் நியாயம் என்று உதவி ஆணையர் (கலால்) மற்றும் சார் ஆட்சியர், திண்டிவனம் (கூ.பொ), அவர்களை கேட்டுக் கொண்டார்.
- அதற்கு உதவி ஆணையர் (கலால்) மற்றும் சார் ஆட்சியர், திண்டிவனம் (கூ.பொ), அவர்கள் வருவாய் துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்ட விபரம் தங்களுக்கு தெரியவில்லை என்று தானே கூறிப்பிடுகிறீர்கள் என்று கேட்டதற்கு ஆம் என்று கூறினார்.
- நான் ஏற்கனவே சில காலம் முன்பு வடிவேல் அவர்களுக்கு சொந்தமான குவாரி மீது அளிக்கப்பட்ட புகார் மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறினார். அளவீடுகள் மேற்கொள்ள குழு பரிந்துரை இதனால் வரை செயல்படுத்தவில்லை என்றும், விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

**<u>4. திரு. சுதாகர், கீழ்சிவிறி கிராமம்,</u>**

- இவர் கூறுகையில், இதற்கு முன் பேசியவர்கள் குவாரியினால் பாதிப்பு ஏற்படுவதாக கூறினார்கள். ஆனால், பல குடும்பங்களின் வாழ்வாதாரம் கிடைக்கிறது.

- எங்கள் ஊரில் உள்ள மக்கள் வெளியூரில் சென்று வேலை செய்கின்றனர்கள். இக்குவாரி அமைவதனால், மக்களுக்கு உள்ளூரிலேயே வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் விவசாயமும் மேற்கொள்ள இயலும் என்று தெரிவித்தார்.
- இந்த குவாரியை பொருத்து அமைந்து உள்ளது என்று கூறி இத்திட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

**5 திரு. ஆறுமுகம், T. நல்லாளம் கிராமம்,**

- இவர் கூறுகையில், குவாரியை நம்பி வாழ்வாதாரம் நடத்தும் குடும்பங்களின் எண்ணிக்கை மிக குறைவு என்று கூறினார். வருவாய்த் துறை அவர்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் ஏதும் தெரியவில்லை என்று கூறினார்.
- மாதேஷ் என்கிற நாச்சியப்பன் குவாரியின் செயல்பாடுகள் குறித்து பல முறை புகார் அளித்துள்ளேன் என்றும் இதனால் வரை நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட வில்லை என்றும் கூறினார். குவாரியில் விபத்து மூலம் ஏற்படும் மரணங்கள் மூடி மறைக்கப்படுகின்றன என்று கூறினார்.
- அதிகாரிகள் உரிய முறையில் ஆய்வு மேற்கொண்டு இருந்தால் இதற்கு தீர்வு கிடைத்து இருக்கும் என்று கூறினார். அக்காலத்தில் மக்கள் கிணறுகளிலேயே நீர் பருகினர் இப்போது குடிநீர் எடுத்து சென்று குடிக்கும் நிலையின் உள்ளனர்.
- இத்திட்டம் குறித்து விளக்கும் போது, அருகில் அமைந்திருக்கும் நல்லாளம் ஏரி குறிப்பிடப்படவில்லை என்று கூறினார். 32 ஓடைகள் இருந்த நல்லாளம் ஏரியில் தற்போது ஒரு ஏரி கூட இல்லை என்று தெரிவித்தார்.
- அதிகாரிகள் இதற்க குழு அமைத்து உடனடியாக ஆய்வு மேற்கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதன்பின்னர் உதவி ஆணையர் (கலால்) மற்றும் சார் ஆட்சியர், திண்டிவனம் (கூ.பொ), அவர்கள் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் இன்றி, எதரிப்பு தெரிவிப்பவர்கள் எவரேனும் பேச விரும்பினால் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

**அதன் பின்னர் வாய்மொழி வாயிலாக பொதுமக்கள் கருத்துக்கள் ஏதும் பெறப்படவில்லை**

**கீழ்க்கண்ட இருபத்து எட்டு பொதுமக்கள் தங்கள் கருத்தை எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1. | திரு. S. வெங்கட சுப்பையா,<br>தலைவர்,<br>பூஜ்ஜிதா ஸ்வச்சானந்தா சேவா சொசைட்டி,<br>1/45, 123 வார்ட்ஸ், கோட்ஹ மாதவரம்,<br>சிடவட்டம், கடப்பா, ஆந்திர பிரதேசம். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், அதிக அளவில் மரக்கன்றுகளை திட்டத்தை சுற்றி வளர்த்திட கேட்டுக் கொண்டார். |
| 2.. | தி/ள் SNBCS சொசைட்டி பார் நேச்சர் அன்ட் பயோடைவர்சிட்டி கன்சர்வேஷன்,<br>பதிவு எண். 331/2022<br>3-32 முசலிப்பேடு கிராமம், கன்டாடு அஞ்சல், எர்பேடு மண்டல், திருப்பதி மாவட்டம் – 517619. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் உரிமையாளர் முறையாக காற்று மாசு தடுப்பு சாதனைங்களை பயன்படுத்தி இயக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். |
| 3.. | திரு. S K கரிமுல்லா, தலைவர்,<br>தி/ள் சேவ் கிரீன் சேவ்<br>என்விரோன்மெண்டல் இந்தியா,<br>பதிவு எண். 425/2015<br>8-2-4 கஜிமன்யம், இப்ராஹிபட்டினம், NTR கிருஷ்ணா மாவட்டம், ஆந்திர பிரதசம் – 521456. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று |

| | | |
|---|---|---|
| | | குறிப்பிட்டுள்ளார். |
| 4.. | திரு. T அனில் ரெட்டி, தலைவர் NGO,<br>தி/ள் கிரீன் இனோவேஷன் நேச்சுரல் &<br>என்விரோன்மெண்டல் சொசைட்டி,<br>பதிவு எண். 492/2023<br>5-7-74 APHB காலணி, கரீம்நகர்,<br>தெலுங்கானா – 505 001. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| 5. | திரு. S அன்கையா,<br>தி/ள் சத்யவீடு கான்ஸ்ட்டூயன்4 "SEZ" பார்மர்ஸ் & A.G. லேபரர்ஸ் ப்ரோடக்ஷன் & டெவலப்மண்ட் அசோசியேஷன். | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| 6. | திரு. P ஹசரததையா,<br>தி/ள் சொசைட்டி பார் டெவலப்மெண்ட் ஆக்ஷன், பதிவு எண். 353/1994<br>ஜிர்ராவரிபேலம், கலிகிரி,<br>SPSR நெல்லூர் மாவட்டம், -<br>ஆந்திர பிரதேசம் – 524 224. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |

| | | |
|---|---|---|
| 7. | திரு. M சுதாகர், செயலாளர்,<br>தி/ள் இன்டக்ரேடட் உமன்<br>டெவலப்மெண்ட் வெல்பேர் சொசைட்டி,<br>பதிவு எண். 350/1996<br>UCO நகர், முதுகூர் ரோடு, 16th டிவிசன்,<br>நெல்லூர் மாவட்டம், -<br>ஆந்திர பிரதேசம் – 524 003. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் இளைஞர் வேலைவாய்ப்பு, மருத்துவ முகாம், CSR நிதியினை உள்ளூர் மக்களுக்கு பயன் பெற வழிவகை செய்திட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். |
| 8. | திரு. D. மலர்தவன், மாவட்ட<br>ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>எண். 43/15 புதுமணி குப்பம், 4வது தெரு,<br>ராயபுரம், சென்னை – 600 013. | |
| 9. | திரு. M முத்து ராஜா,<br>மாவட்ட ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>4, பெருமாள் நகர் ஸ்டிரீட், கமுதி,<br>ராமநாதபுரம் மாவட்டம் – 623 603. | |
| 10. | திரு. A.P. ராஜேந்திரன்,<br>நிறுவனர் மற்றும் தலைவர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>கிருஷ்ணகிரி காலணி, அன்ஜிமேடு அஞ்சல், எர்பேடு மண்டல், திருப்பதி மாவட்டம் – 517619. | |
| 11. | திரு P முத்துக்குமரன்,<br>மாவட்ட ஒருங்கிணைப்பாளர், | |

| | | |
|---|---|---|
| | தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>169, வடக்குத் தெரு, கணிசப்பாக்கம்,<br>பண்ருட்டி வட்டம்,<br>கடலூர் மாவட்டம்- 607 106. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், மொத்த வருவாயில் 10 சதவீதம் இங்குள்ள உள்ளூர் மக்களுக்கான வளர்ச்சி திட்டங்களுக்கு பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். கிராமப்புற ஏழை படித்த மற்றும் படிப்புற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார். |
| 12. | திரு V மணிகண்டன்,<br>நகர ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>7, ரசாக் லே அவுட், 4 வது தெரு,<br>கீழ்ப்பெரும்பாக்கம்,<br>விழுப்புரம் மாவட்டம்- 605 602. | |
| 13. | திரு V சுரேஷ்,<br>நகர துணை ஒருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>7, ரசாக் லே அவுட், 4 வது தெரு,<br>கீழ்ப்பெரும்பாக்கம்,<br>விழுப்புரம் மாவட்டம்- 605 602. | |
| 14. | திரு M சிவநாதன்,<br>மாவட்ட ருங்கிணைப்பாளர்,<br>தி/ள் பாரதிய நாகரிக சேவா சங்கம்,<br>பதிவு எண். 301/2009<br>7, ரசாக் லே அவுட், 4 வது தெரு,<br>கீழ்ப்பெரும்பாக்கம்,<br>விழுப்புரம் மாவட்டம்- 605 602. | |

| | | |
|---|---|---|
| 15. | திரு. B. சுப்பாராமையா,<br>செயலாளர் மற்றும் இயக்குநர்,<br>ரூரல் அப்லிப்ச்மண்ட் நெட்வொர்க் சொசைட்டி, NGO, திருப்பதி. | இவர் முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு தனது ஆதரவைத் தெரிவித்ததுடன், பசுமை அபிவிருக்தி எய்திடவும், திட்டத்தின் உரிமையாளர் முறையாக காற்று மாசு தடுப்பு சாதனைங்களை பயன்படுத்தி இயக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். |
| 16. | திரு. எஸ். ரங்கநாதன்,<br>த.பெ. சுப்புராயன்,<br>நெ. 3 மாரியம்மன் கோவில் தெரு,<br>கீழ்சிவிறி கிராமம் மற்றும் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | இத்திட்டம் அமைய உள்ள இடத்திற்கு அருகாமையில் இவர்களின் விவசாய நிலங்கள் உள்ளதால் விவசாய நிலங்கள் பாதிப்படையும் எனக்கூறி ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். |
| 17. | திரு. எஸ். ஜெய்சங்கர்,<br>த.பெ. சுப்புராயன்,<br>நெ. 3 மாரியம்மன் கோவில் தெரு,<br>கீழ்சிவிறி கிராமம் மற்றும் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 18. | திரு. எஸ். ஞானமூர்த்தி,<br>த.பெ. சுப்புராயன்,<br>நெ. 3 மாரியம்மன் கோவில் தெரு,<br>கீழ்சிவிறி கிராமம் மற்றும் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 19. | திரு. P. சஞ்சீவி,<br>த.பெ. பொன்னுசாமி,<br>நெ. 3 மாரியம்மன் கோவில் தெரு,<br>கீழ்சிவிறி கிராமம் மற்றும் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 20. | திரு. கோ. ஆறுமுகம், த.பெ. கோவிந்தசாமி, | |

| | | |
|---|---|---|
| | T. நல்லாளம் கிராமம்,<br>மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 21. | திரு. S. சுப்ரமணியன், த.பெ. சக்கரை,<br>T. நல்லாளம் கிராமம்,<br>மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 22. | திரு. G. வினோத் குமார்,<br>மனித உரிமைகள் அணி,<br>பதிவு எண். 56/91/2016-17/pps-1<br>T. நல்லாளம் கிராமம்,<br>மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | இவர் தனது கருத்தினை வாய்மொழியாகவும் எழுத்துப் பூர்வமாகவும் தெரிவித்து உள்ளார். |
| 23. | திரு. அப்துல் காதர்,த.பெ. முகமது கலீல்,<br>மசூதி தெரு, பெருமுக்கல் அஞ்சல்,<br>மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 24. | திரு. ரியாஸ், த.பெ. நியமர்த்துல்லா,<br>T. நல்லாளம் கிராமம், பெருமுக்கல் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 25. | திரு.குப்சார், த.பெ. காஜா நியாமதுல்லா,<br>T. நல்லாளம் கிராமம், பெருமுக்கல் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 26. | திருமதி. பத்மா, ,<br>T. நல்லாளம் கிராமம், பெருமுக்கல் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 27. | திரு. முகமது ஹாசீம், த.பெ. அப்துல் காதார் ,<br>T. நல்லாளம் கிராமம், பெருமுக்கல் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 28. | திரு. வி. மாணிக்கம், த.பெ. உத்திரகேசரி,<br>பெருமுக்கல் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |

| | | |
|---|---|---|
| 29. | திரு. R.வெங்கடேசன் த.பெ. ராமசாமி,,<br>பழமுக்கல் கிராமம்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | இவர்கள் இத்திட்டம் அமைந்தால் வெளியூர்களில் வேலை புரியும் எங்களுக்கு உள்ளூரிலே வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும், அதனால் தங்கள் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் என்று கூறி தங்கள் ஆதரவினை தெரிவித்துள்ளனர். |
| 30. | திரு. உத்தர மூர்த்தி த.பெ. பொன்னுசாமி,,<br>பழமுக்கல் கிராமம்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 31. | திரு. முஹம்மத் முசத்திக்<br>த.பெ. முகமது முஸ்தபா,,<br>T. நல்லாளம் கிராமம், பெருமுக்கல் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 32. | திரு. M. முகமது தஸ்தகிர்,<br>தபெ. முகமது யூசப்,<br>T. நல்லாளம் கிராமம், பெருமுக்கல் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 33. | திரு. வெங்கடேசன்,<br>தபெ. கோவிந்தராஜ்,<br>கீழ்சிவிறி, பழமுக்கல்,<br>திண்டிவனம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் | |
| 34. | திருமதி. கீதா ராஜேந்திரன்,<br>பெருமுக்கல்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 35. | திரு. ராஜேந்திரன் சுப்ராயன்,<br>பெருமுக்கல், திண்டிவனம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 36. | திரு. P. முருகன்,<br>கீழ்சிவிறி,பெருமுக்கல்,<br>திண்டிவனம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |

| | | |
|---|---|---|
| | திண்டிவனம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 37. | திரு. முகமது ஜாபர்,<br>த.பெ. முகமது கலீல்,<br>பெருமுக்கல், திண்டிவனம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |
| 38. | திருமதி. எஸ். அபிதா,<br>த.பெ. சர்தார் பாஷா, T. நல்லாளம்,<br>பெருமுக்கல், திண்டிவனம் வட்டம்,<br>விழுப்புரம் மாவட்டம். | |

**<u>திரு. மணிகன்டன், பழமுக்கல் கிராமம்,</u>**

- இறுதியாக, இவர் கூறுகையில், தான் ஒரு Hitachi Operator எனவும், வேலைவாய்ப்பு இல்லாமல் உள்ளதாகவும், இத்திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தனது ஆதரவை தெரிவித்தார்.

**பின்னர் எழுத்துப்பூர்வமான மற்றும் வாய்மொழியான கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை கூறினார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தர். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - விழுப்புரம், மரக்காணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மரக்காணம் தாலுகா அலுவலகம், T. நல்லாளம் கிராம

ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் ஆகிய இடங்களில் வைக்கப்படும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் -தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் கூறினார்.

17/07/25

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விழுப்புரம்.

17/07/25

சார் ஆட்சியர் (கூ.பொ).
திண்டிவனம்

17/07

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 11.06.2025).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (14 பக்கங்கள் 69 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 38 மனுக்கள்.